# மதுரையில் உற்சாகமாக நடைபெற்ற பரதநாட்டிய கலை விழா!

அருண் சின்னதுரை

ஈ.ஜெ.நந்தகுமார்



மதுரை காமராஜர் சாலையில் உள்ள தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தில் கலைக்கூட அகடமி சார்பில் பரதநாட்டிய கலை விழா நேற்று நடைபெற்றது. இதில் அஸ்ஸாம் மாநிலம், கவுகாத்தியைச் சேர்ந்த மீனாட்சி மேத்தியின் சத்ரியா நடனம், ஒடிசாவைச் சேர்ந்த ஆத்ரேயா தத்தாவின் ஒடிசி நடனம்,

டெல்லியைச் சேர்ந்த கரிமா ஆர்யாவின் கதக் நடனம், சென்னையைச் சேர்ந்த அஸ்ரித்தி கேசவ் மற்றும் மதுரை கலைக்கூட அகடாமி மாணவிகளின் ஜம்பு நடனம் முதலியவை இடம் பெற்றது. இந்தப் பரதக் கலைகள்குறித்து பரத நாட்டிய ஆசிரியை முருக சங்கரி கூறும்போது ``பாரம்பர்ய கலைகளான பரதம், ஒடிசி, குச்சிப்புடி, கதக், சத்ரியா போன்ற நடனம் இளைய தலைமுறையினர் தெரிந்துகொள்ளவும், இந்த நடனக் கலைகள் அழியாமல் பாதுகாத்துக்கொள்ளவும், விழிப்பு உணர்வு ஏற்படுத்துவதுதான் இதன் முக்கிய நோக்கம். இந்தக் கலைகளை நாம் போற்றப்பட வேண்டும், மிகவும் கடினமான நடனத்தால் உடல் ஆரோக்கியம் பெறும்; மனம் ஒருநிலைப்படும்'' என உற்சாகத்துடன் தெரிவித்தார்.